# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 17 புதன்கிழமை 30.04.2025 கதிர் 182







# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீளாய்வு சாதகமாகக் கருத்தில் கொள்ளப்படும்!

## அநுரவிடம் ஐரோப்பிய ஒன்றியக் குழு உறுதி



கொழும்பு, ஏப். 30

**ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீளாய்வு சாதகமான முறையில் கருத்தில்கொள்ளப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவுக்கான தலைவர் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.**

**இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் இன்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே சார்ல்ஸ் வைட்லி இவ்வாறு கூறினார்.**

**ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது என்றும், தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைய இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.**

**ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தரப்படுத்தப்பட்ட மற்றும் தரமான பொருட்களை விநியோகிக்க இலங்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசிய தலைவர் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்க, கருத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசின் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன என்றும் சார்ல்ஸ் வைட்லி குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை அல்லது பொதுவான விருப்பத்தேர்வு முறை தொடர்பான 27 சர்வதேச இணக்கப்பாடுகளை செயற்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

அதேபோல், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதார ரீதியில் சரிவடைவதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் அரசியல் முறையும், வீண் விரயமும், மோசடியுமே காரணமாக அமைந்திருந்ததாகவும், இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருவதாகவும், அதற்கு சிறிது காலம் அவகாசம் அவசியம் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தற்போதைய அரசின் மீது ஒட்டுமொத்த மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இலங்கையில் முன்னைய அரசுகள் தெற்கு சிங்கள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன. ஆனால், இம்முறை வடக்கின் தமிழ் மக்கள், கிழக்கு முஸ்லிம் மக்கள் மற்றும் தெற்குச் சிங்கள மக்களும் தற்போதைய அரசை உருவாக்க ஆதரவளித்தனர் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தார். 7

## பருத்தித்துறை கடற்பரப்பில் கஞ்சாவுடன் நால்வர் கைது!



பருத்தித்துறை, ஏப். 30

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து 338 கிலோ கஞ்சா நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவத்துடன் 7

## செம்மணிப் புதைகுழியில் மே 15 ஆம் திகதி அகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம்-செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில், மே மாதம் 15ஆம் திகதியன்று அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக முன்னிலையாகும் 7

## ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. பிளஸ் குழுவிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகள்

### தமிழ் முற்போக்குக் கூட்டணி சமர்ப்பிப்பு



கொழும்பு, ஏப். 30

"சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் சலிப்பு அடைந்து விட்டார்கள். இலங்கை தொடர்பில் ஐ.நாவில் பிரதான பங்களிப்புச் 7

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு பல்கலைகளுக்கு மூன்று நாட்கள் விடுமுறை



கொழும்பு, ஏப். 30

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தலை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மூன்று நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு விடுமுறை 7

# உரிமைகளுக்காகவும், சமத்துவமான சமூக நல் வாழ்வுக்காகவும் ஒன்றிணைவோம்”

“உரிமைகளுக்காகவும், சமத்துவமான சமூக நல் வாழ்வுக்காகவும் ஒன்றிணைவோம்” என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது மேதின அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளது. இன்றைய மே தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழுமையான வடிவம் வருமாறு:

மேதினம்என்பது உலகம்முழுவதும்தொழிலாளர்களின் உரிமைக்குரல்கள், மற்றும் போராட்டங்களை நினைவுகூரும் நாள் மட்டுமல்ல அது எதிர்காலத்தை நோக்கி நியாயமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய கடமையினையும் நினைவூட்டும் நாள். எனவே 2025 மே தினத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களாகிய நாம் இலங்கை ஆசிரியர் சங்கம், வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து உழைப்பாளர்களின் உரிமைகளையும் சமத்துவமான சமூக நல்வாழ்வையும் முன்னிறுத்தி நிற்கின்றோம்.

தனது உழைப்பால் தன்னையும் சமூகத்தையும் முன்னேற்ற முனைகின்ற, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளவர்கள் அனைவரும்உழைப்பாளரே. இன்றுஉழைப்பாளர்களாகிய நாம் பல அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கிறோம். சமனற்ற வளப்பங்கீடு, மற்றும் மொழி, இனம், மதம், பால் ரீதியான பாகுபாடுகள், புறக்கணிப்புக்கள் பொருத்தமற்ற வேலைச்சூழல், ஊதியக் முரண்பாடுகள், நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்களில் தலையீடுகள், ஆகியவை உழைப்பாளர் நலன்களை கடுமையாக பாதிக்கின்றன. இவை எம்மோடு இணைந்த சமூகத்தின் ஒவ்வொரு துணைக்கூறுகளிலும் பாரிய தாக்கத்தினை தினம் தினம் ஏற்படுத்தி வருகின்றன. இதற்கு எதிராக உழைப்பாளர் ஆகிய நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் நாங்கள் காலங்காலமாக அடக்குமுறைகளையும், சுரண்டல்களையும், புறக்கணிப்புக்களையும், அழுத்தங்களையும் சந்தித்து வருகின்றோம். நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் ஒடுக்குமுறைகள் அதனால் ஏற்பட்ட வலிகள், போராட்டங்கள், இழப்புக்களிற்குப் பின்னரும் வலிகளை மறக்கும்படியான எந்தவொரு மாற்றத்தினையும், நியாயமான தீர்வையும் இன்றுவரை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மொழி உரிமை, நில உரிமை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அரசியற் கைதிகள் விடயம், சட்ட ஆட்சி, தீர்வு வழங்கல், மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பன இன்னும் இங்கு எமது அவாக்களாகவும், எதிர்பார்ப்புகளாகவுமே காத்திருக்கின்றன. இவற்றை அடைய ஒரே கொள்கையுடன் அனைவரையும் ஓரணியில் ஒன்றுபடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். முழு நாடும் கடன் சுமை, பணவீக்கம், தொழில்வாய்ப்பின்மை, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, உயர் வாழ்க்கைச் செலவு, அரச கொள்கைகள் மற்றும் சேவைகளில் உள்ள குறைபாடுகள், இலஞ்சம், போதைப்பொருள், ஆயுத கலாச்சாரம் போன்றவற்றால் மிகவும் நெருக்கடிக்குள்ளாகி உள்ளது. இவற்றின் காரணமாக அனைவரும் இன, மத, பிரதேச வேறுபாடின்றிக் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளோம். இவற்றிலிருந்து விடுபடும் நோக்கோடு அனைவரும் ஒன்றிணைந்து மாற்றத்திற்காக புதிய அரசிற்கு ஆணையை வழங்கிய போதும், எதிர்பார்த்த மாற்றங்களோ அல்லது அவற்றின் பயன்களையோ இதுவரை அனுபவிக்க முடியவில்லை எனும் நாட்டு மக்கள் ஒவ்வொருவரதும் ஆதங்கத்தினையும் வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

மே தினம் என்பது இன, மத, மொழி பேதமின்றி அனைவரதும்சமத்துவத்தினையும், உரிமைகளினையும், விடுதலையையும், சமூக நல் வாழ்வையும் வலியுறுத்தும் நாளாகும். இத்தினத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்கள் ஆகிய நாம் எமது மக்களின் அபிலாசைகள், நிலைத்த அபிவிருத்தி, சம உரிமை, நியாயமான தீர்வு, அடக்குமுறை அற்ற சமத்துவமான சக வாழ்வு தொடர்பில் எமது முன்னோர் வழி அஞ்சாது தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என உறுதி கூறுகின்றோம்.

ஓங்குக தொழிலாளர் ஒற்றுமை! ஓங்குக மக்கள் சக்தி!! ஓங்குக சமத்துவம்!!!

# க்ளோரின் கசிவால் நால்வர் பாதிப்பு

*கொழும்பு,ஏப்.30*

*பசறை நகரில் நீர் சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படும் க்ளோரின் சிலிண்டரில் ஏற்பட்ட திடீர் கசிவைத் தொடர்ந்து நான்கு பேர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குறித்த வைத்தியசாலையில் இருந்த அனைத்து உள்நோயாளிகள் வார்டுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதிலிருந்த, 14 நோயாளிகள் தற்காலிகமாக ஹாப்டன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மருத்துவமனைக்கு அருகே உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்த 76 வயதுடைய பெண் ஒருவர் குளோரின் சிலிண்டர் கசிவு காரணமாக சுவாசிப்பதில் சிரமமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 43 வயதுடைய ஆண், 73 வயதுடைய பெண் மற்றும் 26 வயதுடைய பெண் ஆகியோர் பசறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.*

*பசறை பிரதேச சபைக்குட்பட்ட பசறை நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பயன்படுத்தப்படும் க்ளோரின் சிலிண்டரில் திடீரென கசிவு ஏற்பட்டதால், அவர்கள் நால்வரும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதாகவும், பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நோயாளியின் நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.* (ஐ)



# இந்திய மீனவர்களை தடுப்போம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

“இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் இலங்கை கடற்படையினருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.” என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். நெடுந்தீவு பகுதிக்கு செவ்வாய்க்கிழமை (29) அன்று பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் தமது வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் மீனவர்கள், அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு நிரந்தர பாதுகாப்பு பொறிமுறையொன்று அவசியம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்குரிய இராஜதந்திர நடவடிக்கை உட்பட அனைத்து விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும், இது தொடர்பில் கடற்படையினருக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் இறங்குத்துறை பிரச்சினை சம்பந்தமாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

அதேவேளை, நெடுந்தீவு மக்களுடனும் அமைச்சர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது நெடுந்தீவு அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது (ஐ)



# ஊழல் மோசடிகளை நிரூபித்துக் காட்டுங்கள்!

## அநுர அரசுக்கு மொட்டு சவால்

கொழும்பு, ஏப். 30

“நாட்டில் பெரியளவில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றதாக தேசிய மக்கள் சக்தி பரப்புரை செய்கின்றது. எனவே, விமர்சனங்களை மட்டும் முன்வைக்காமல், இவை தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையை வெளிப்படுத்த வேண்டும். இதை ஒரு சவாலாக அரசு எடுக்க வேண்டும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“பொய்கள் மற்றும் வன்மங்களை விதைத்தே தேசிய மக்கள் சக்தி பிரச்சாரம் செய்தது. போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. தற்போது ஆட்சி அதிகாரம் கிடைத்தும் பழைய பாணியிலேயே பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். ஆட்சியும் உங்களிடம் உள்ளது. அதிகாரமும் உங்களிடம் உள்ளது. எனவே, ஊழல்களும் மோசடிகளும் இடம்பெற்றிருந்தால், அவற்றை நிரூபித்துக் காட்டுங்கள். இதை ஒரு சவாலாக அரசுக்குக் கூறிக்கொள்கின்றோம்.

வேகமாக வளர்ச்சியடைந்த நாட்டை தேசிய மக்கள் சக்தியே நாசமாக்கியது. இதற்காக ‘பொய்’ எனும் ஆயுதம் பயன்படுத்தப்பட்டது.” – என்றார்.

# சிவராமுக்கு மட்டக்களப்பில் நினைவேந்தல்

மட்டக்களப்பு,ஏப்.30

படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் (தராக்கி) 20வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் செவ்வாய்க்கிழமை(29) மாலை 4.30. மணியளவில் நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில் அனுஸ்டிக்கப்பட்டது.

சிவராமின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து, ஈகைச் சுடர் ஏற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மட்டு ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் சிரேஸ்ட ஊடகவியலாளர் பா.அரியநேந்திரன் , சுதந்திர ஊடக இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஸ்மன் உட்பட மாவட்ட ஊடகவியலாளர்கள் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் தராக்கி சிவராமின் சமூக நலன், தமிழ் பற்று, தமிழினத்தின் கெடுபிடிகள், பேனா முனையின் சாதனைகள் இங்கு உணர்வுரீதியாக அதிதிகளினால் உரையாற்றப்பட்டது. (ஐ)





# இலங்கைக்குச் சீனா முழுமையாக உதவும்

## தூதுவர் கி ஷென் ஹொங் உறுதி

கொழும்பு, ஏப். 30

“இலங்கை இன்று கொந்தளிப்பான வர்த்தக உலகத்துக்குள் முழுமையாகச் சிக்கியுள்ளது. இலங்கையின் உரிமைகள் குறைமதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து மீள்வதற்கு சீனா இலங்கைக்கு உதவும்.” – என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென் ஹொங் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“எந்தப் பொருளாதார புயலாலும் பாதிக்கப்படாத வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியது இலங்கை அரசின் முன்னுரிமைக்குரிய விடயமாக உள்ளது. அமெரிக்காவின் வரி விதிப்புகள் செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்கும். மிகவும் வறிய நாடுகள் மோசமான தாக்கத்தை எதிர்கொள்ளும்.

மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடு என்ற வகையில் அபிவிருத்திக்கான இலங்கையின் உரிமை குறைமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பலவீனமான பொருளாதாரத்தின் மீது அதிகளவு அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. அமெரிக்கா தனது மேலாதிக்கத்தையும், அதிகார அரசியலையும் முன்னெடுப்பதற்காக வரிகளை பயன்படுத்துகின்ற சூழ்நிலையில், இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கவும், உலகளாவிய வர்த்தக பதற்றங்களை எதிர்கொள்வதற்கும் சீனா முழுமையான உதவிகளை இலங்கைக்குச் செய்யும். உலகளாவிய கண்டனங்களை மீறி அமெரிக்கா ஒரு வரிப்போரை முன்னெடுக்கின்றது. ஆதலால், உலகம் கொந்தளிப்பான புதிய காலகட்டத்தில் நுழைகின்றது.

ஆனால், ஒருதலைப்பட்சமான இந்த பொருளாதாரப் போக்குகளை அடியோடு நிராகரிப்பதற்கான திறன் சீனாவுக்கு உள்ளது. இந்தப் புதிய பொருளாதாரப் போக்குகளுக்கு எதிராக வெற்றிபெறக்கூடிய நம்பிக்கையும் சீனாவிடம் இருக்கின்றது.

கொந்தளிப்பான உலகத்தை எதிர்கொள்ளும் இலங்கையும், தனது சொந்த சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களை இன்னமும் உறுதியாகப் பாதுகாக்க வேண்டும்.

சீனா மிகவும் நம்பகரமான சகா என்பதை இலங்கை நம்பவேண்டும்.

அமைதி மற்றும் வளர்ச்சியின் போக்கை பின்பற்றவேண்டும். மேலும் புவிசார் அரசியல் கூட்டு மோதல்களையும் ஒருதலைப்பட்சவாதத்தையும் இலங்கை எதிர்க்க வேண்டும்.” – என்றார்.

# பயங்கரவாத தாக்குதல்: மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை குழு ஆலோசனை



புதுடில்லி: டில்லியில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம், பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக, நேற்று, டில்லியில் உள்ள பிரதமர் மோடி இல்லத்தில், உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அப்போது, "எங்கு, எப்போது, எந்த இலக்கை தாக்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்ய, ராணுவத்துக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது," என, பிரதமர் மோடி தெரிவித்தார்.

பாக்., மீது தாக்குதல் நடத்த ராணுவத்துக்கு பச்சைக்கொடி! ஆலோசனைக்கு பின் பிரதமர் மோடி உத்தரவு

இந்நிலையில் இன்று (ஏப்ரல் 30) டில்லியில் பிரதமர் மோடியின் தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக அமைச்சரவை குழு உடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

ராணுவ ரீதியான நடவடிக்கை குறித்து, அமைச்சரவை குழு கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ஐ)

## சுய ஒழுக்கம், கட்டுப்பாடு முக்கியம் தொண்டர்களுக்கு விஜய் கண்டிப்பு



'நம்ம அரசியல்ல கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோட கண்டிப்பும், சுய ஒழுக்கமும் 100 சதவீதம் சமரசமற்றதாக இருக்க வேண்டும்" என த.வெ.க., தலைவர் விஜய் தெரிவித்தார்.

என் நெஞ்சில் குடியிருக்கும் என் உயிரினும் மேலான தோழர், தோழியர் அனைவருக்கும் வணக்கம். மூன்று தினங்களுக்கு முன், கோவையில் நடைபெற்ற நம் தமிழக வெற்றிக் கழகத்தின் வாக்குச்சாவடி முகவர்களின் கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த என்னை உங்கள் அளவு கடந்த அன்பால் நனைய வைத்தீர்கள். நம் மீது இத்துணை அன்பைக் காட்டும் உங்களுக்கும் மக்களுக்கும், உண்மையான மக்களாட்சியையும் உண்மையான ஜனநாயக அதிகாரத்தையும் மீட்டுத் தருவதுதான் நாம் காட்டும் அன்புக் காணிக்கையாக இருக்கும்.

2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் வெற்றியால் இதை நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவோம். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் தமிழகமெங்கும் உள்ள நம்முடைய இளம் தோழர்களுக்கு என்னுடைய அன்பு வேண்டுகோள்கள் சில உண்டு. அவை அன்புக் கட்டளைகளாகவும் இருக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை. நம்முடைய இளைய தோழர்கள், நமது வாகனங்களை இரு சக்கர வாகனங்களில் தலைக் கவசமின்றி வேகமாகப் பின்தொடருவது, பாதுகாப்புக் குழுவினரை மீறி வாகனத்தின் மீது ஏறுவது, குதிப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டது எனக்கு மிகவும் கவலையை அளித்தன.

அதனால இப்ப கொஞ்சம் உங்ககிட்ட மனசு விட்டு பர்சனலா பேச விரும்புகிறேன். இவ்ளோ அன்போட இருக்கிற நீங்க எனக்குக் கிடைச்சதுக்கு நான் என்ன தவம் செஞ்சேன்னு எனக்குத் தெரியவில்லை. நம்ம அரசியல்ல கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோட கண்டிப்பும், சுய ஒழுக்கமும் 100 சதவீதம் சமரசமற்றதாக இருக்க வேண்டும்.

அதுதான் நம்ம அரசியலுக்கும் நல்லதுன்னு உங்களுக்கே தெரியும். இனி அடுத்தடுத்து நம்ம மக்களை சந்திக்கிற நிகழ்ச்சிகளெல்லாம் இருக்கிறது. நான் சொல்றத நீங்க இனிமே ஸ்ட்ரிக்ட்டா பாலோ செய்வீங்கன்னு நம்புகிறேன். செய்வீங்க, செய்றீங்க, ஓகே? இவ்வாறு விஜய் கூறியுள்ளார். (ஐ)

## அழகிய தமிழ்ப்பெயர்களை அறிவதற்காக இணையப்பக்கம் துவங்குகிறது தமிழக அரசு




''குழந்தைகளுக்கான அழகிய தமிழ்ப் பெயர்களும், அதற்கான பொருளும் அடங்கிய இணையப்பக்கம் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் தொடங்கப்படும்" என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

கட்சி நிர்வாகிகள் இல்ல திருமண விழாவிற்கு செல்லும் போது எல்லாம், பிறக்கும் குழந்தைக்கு தமிழ் பெயர் சூட்டுங்கள் என முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து கூறி வருகிறார். அந்தவகையில், இன்று சென்னையில் நடந்த கட்சி நிர்வாகி, மயிலை வேலு இல்லத் திருமண விழாவில் ஸ்டாலின் பேசுகையில், "குழந்தைகளுக்கு அழகான தமிழ் பெயரை சூட்டுங்கள். அதுதான் எனது வேண்டுகோள்" என தெரிவித்தார்.

இந்த வீடியோவை பகிர்ந்து ஒருவர், "குழந்தைகளுக்கு தமிழ் பெயர்கள் வைக்க நினைத்தாலும், குழந்தை பெயர்கள் மற்றும் அதற்கான பொருளை தெரிந்துகொள்ள சரியான சமூக வலைதளங்கள் தமிழகத்தில் இல்லை.

எனவே, இதற்காக தமிழ் வளர்ச்சித்துறை அல்லது தமிழ் இணையக் கல்விக்கழகம் சார்பில் வலைத்தளம் உருவாக்கினால் சிறப்பாக இருக்கும்" என பதிவிட்டு இருந்தார். இதற்கு பதில் அளித்து முதல்வர் ஸ்டாலின் சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார். "குழந்தைகளுக்கான அழகிய தமிழ்ப் பெயர்களும், அதற்கான பொருளும் அடங்கிய இணையப்பக்கம் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் தொடங்கப்படும்" என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். (ஐ)


## எதிர்க்கட்சி கூட்டணியை ஒரு கை பார்ப்போம்: சொல்கிறார் முதல்வர் ஸ்டாலின்

சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கடந்த காலங்களில் ஊர்ந்து கொண்டிருந்த தமிழகம் இன்று கம்பீரமாக நடந்து செல்கிறது. இதை நான் சட்டசபையில் பேசும் பொழுது அப்படியே கடந்து சென்று இருக்கலாம் ஆனால் அவர்கள் தானாக வந்து சிக்கிக் கொண்டார். எதிர்க்கட்சி துணை தலைவர் ஊர்ந்து என்று சொல்ல வேண்டாம் என்றார். நான் தவழ்ந்து என போட்டுக்கொள்ளுமாறு கூறினேன்.

தற்போது, தவழ்ந்து, தவழ்ந்து முதல்வர் ஆகினேன் என பழனிசாமி கூறி வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. உலகிற்கு வழிகாட்டும் அளவிற்கு சிறப்பான ஆட்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். நாங்கள் நிச்சயமாக உறுதியாக, நம்மை எதிர்க்க கூடியவர்கள், எந்த நிலையில் வந்தாலும் சரி, எப்படி கூட்டணி வைத்து கொண்டு வந்தாலும் சரி, ஒரு கை பார்ப்போம் என்ற உணர்வோடு தான் தங்களது கடமைகளை ஆற்றி கொண்டு இருக்கிறோம்.

எதையும் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் 200 தொகுதி என்ன 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அது, வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத் துறை ஆக இருந்தாலும் கவலையில்லை. நாம் நெருக்கடியை பார்த்து வளர்ந்துள்ளோம். நீங்கள் நெருக்கடியை ஆதரிக்க வேண்டாம். எதிர்க்காமல் இருக்க வேண்டும். தி.மு.க.,வின் வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம். 7வது முறையாக தி.மு.க., ஆட்சி அமையும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். (ஐ)

## பா.ஜ., – த.வெ.க., கூட்டணி குறித்து தெரியாது நயினார் நாகேந்திரன் பதில்!



'பா.ஜ., - த.வெ.க., கூட்டணி குறித்து எதுவும் எனக்குத் தெரியாது" என நிருபர்கள் கேள்விக்கு தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் பதில் அளித்தார்.

காஞ்சிபுரத்தில் நிருபர்கள் சந்திப்பில், நயினார் நாகேந்திரன் கூறியதாவது: தி.மு.க., ஆட்சி விரைவில் அகற்றப்படும். தேர்தல் வருவதற்கு இன்னும் ஒரு வருடம் இருக்கிறது. தேர்தல் பணியை அவர்கள் வேண்டுமானாலும் ஆரம்பித்து இருக்கலாம்.

ஆட்சிக்கு வருவதை மக்கள் தான் முடிவு செய்வார்கள். பா.ஜ., - த.வெ.க., கூட்டணி குறித்து எதுவும் எனக்குத் தெரியாது. நேற்று தான் பிரதமர் மோடி, அமித்ஷாவை பார்த்தேன். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# துயரிலிருந்து வெளியே வா!

**நாம் இயற்கையின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் என்ற உணர்வு வரும்போது அதற்கான முதல் தகுதியாக மற்றவரின் மேல் பரிவும் கருணையும் கூடிவிடும். அவர்கள் இடத்தில் இருந்து அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் திறனையும் வளர்த்துக் கொண்டால். எந்த முயற்சியும் செய்யாமலே நீங்கள் மற்றவரின் மேல் பரிவு காட்ட ஆரம்பித்து விடுவீர்கள்.**



நம் வாழ்வில் ஒரு மோசமான அல்லது கடினமான ஒன்று நடந்து முடிந்த பின்பு மீண்டும் மகிழ்ச்சியான, வெற்றிகரமான, ஆரோக்கியமான வாழ்விற்குத் திரும்பும் திறனே மீண்டெழுதல் அல்லது மீள்திறன் (சுநளடைநைஉந). நிச்சயமாக எளிதான திறனல்ல, ஆனால் சாத்தியமானதுதான்.


நாம் அனைவருமே பொருள் இழப்பு, அன்புக்குரியவர்களின் விலகல் ஃ மரணம், ஆரோக்கிய இழப்பு, விபத்தில் உடல் உறுப்பு இழப்பு, வேலை இழப்பு, தொழிலில் பின்னடைவு என ஏதாவது ஓர் இழப்பை சந்தித்து இருப்போம். இழந்ததை நினைத்து வருந்தலாம். ஆனால், முடங்கி விடாமல், முன்னோக்கி நகர்வதே வாழ்க்கை. எதையும் ஆரோக்கியமாகக் கடந்து போகும் மனநிலைதான் மீள் திறன்.

இதற்கு மற்ற பிற வாழ்க்கைத் திறனை மேம்படுத்துவது அவசியம். நம் மன முதிர்ச்சிகேற்ப காலம், மன திண்மை, நம்மைச் சுற்றி உள்ளவர்களின் ஆதரவு, சுய மதிப்பு, சுய நேசம் ஆகியவை தேவைப்படும். சில நேரம் பின்னடைவும் சகஜம்தான். விடாமுயற்சியுடன் பயிற்சி செய்யும் போது வெற்றி தொடும் தூரம்தான்.

மீள் திறன் உண்டென்றால் அவர்களைத் தோல்வியும் இழப்பும் பாதிக்காதென்பது அல்ல. இழப்பும் தோல்வியும் ஏற்படுத்திய வலியில் இருந்து அவர்களால் எவ்வளவு விரைவாக வெளிவர முடியும் என்பதுதான்.

ஒரு துயரமான சூழ்நிலையை வெற்றிகரமாகச் சந்தித்த ஒருவர், எல்லாவற்றையும் அப்படியே சந்திக்க முடியாமல் போகலாம். எல்லா நேரத்திலும் மீள்திறன் ஒரே அளவில் இருக்கவும் இருக்காது. டொக்டர் சூட் தியரிபடி இந்த 5 குணங்கள் மீள் திறனை மேம்படுத்த உதவும்.

நன்றியுணர்வு
பரிவு





ஏற்றுக் கொள்ளுதல்
வாழ்வை அர்த்தப்படுத்துதல்
மன்னித்தல்

இது அனைத்தும் படிக்க எளிதாக இருந்தாலும் பயிற்சி செய்ய எளிதானதல்ல.

ஒரு பெரிய இழப்பின் பின் நன்றியுணர்வு வருவது எளிதல்ல.

என் மனமே வலியில் துடிக்கும்போது மற்றவரின்மேல் பரிவு கொள்வது இயல்பல்ல.

மன்னித்தலோ எதையும் அப்படியே ஏற்றுக்கொள்வதோ சாதரணமாக நடப்பதில்லை.

இதையெல்லாம் இழப்பு நேர்ந்த பிறகு பயிற்சி செய்ய நினைத்தால் நம் மனம் அதற்கு எதிராகவே வேலை செய்யும். ஆனால், நாம் நன்றாக இருக்கும் நாட்களிளேயே இதையெல்லாம் பயிற்சி செய்தால், கடினமான பிடிக்காமல் ஒத்துப் போகும்.

நாம் நல்ல மனநிலையில் இருக்கும் போதே காலை கண் விழித்ததில் இருந்து இரவு நாள் முடியும் வரை நமக்கு நடக்கும் ஒவ்வொரு நல்ல விஷயத்திற்கும் நன்றி சொல்லப் பழகும்போது, அதுவரை வயமநகெழச பசயவெநன ஆக நினைத்திருந்த விஷயங்கள்கூட நமது நன்றிக்கு உரித்தானவை என்று புரிய ஆரம்பிக்கும். வாழ்வைப் பற்றிய ஒன்றிரண்டு புகார்கள் இருந்தாலும் அதெல்லாம் சிறிதாக தோன்றும்.

நாம் இதையெல்லாம் மனதார உணர ஆரம்பிக்கும் போது இயற்கை நம் மேல் காட்டும் அளப்பறிய கருணையும் அன்பும் புரியும். மனம் மகிழ்ச்சியில் நிறையும். நீங்களே இதை ஒரு 21 நாட்கள் தொடர்ச்சியாகச் செய்து பாருங்கள். உங்களுக்குள் ஏற்படும் மாற்றம் புரியும்.

நாம் இயற்கையின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் என்ற உணர்வு வரும்போது அதற்கான முதல் தகுதியாக மற்றவரின் மேல் பரிவும் கருணையும் கூடிவிடும். அவர்கள் இடத்தில் இருந்து அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் திறனையும் வளர்த்துக் கொண்டால், எந்த முயற்சியும் செய்யாமலே நீங்கள் மற்றவரின் மேல் பரிவு காட்ட ஆரம்பித்து விடுவீர்கள்.

அன்பானவர்களின் மரணத்தைத் தவிர வேறு எந்த விதப் பிரிவோ துரோகமோ ஏமாற்றமோ பகையோ உங்களால் எதிரில் இருப்பவருக்கும் பரிவு காட்ட முடியும். அது உங்களை விரைவாக ஆற்றுப்படுத்தும்.

எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் எனக்கு இது நடந்திருக்கக் கூடாது என்று முரண்டு பிடிக்காமல் நடந்ததை அப்படியே ஏற்றுக் கொண்டு, அது கற்றுத் தரும் பாடத்தை மனதில் இருத்திக் கொண்டால், மறுபடியும் அப்படி ஒரு நிகழ்வு நடவாமல் தடுக்கலாம். ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் மனம் காயப்படாமலும் காக்கும்.

நம் ஒவ்வொருவருக்கும் வாழ்வின் அர்த்தமும் குறிக்கோளும் உண்டு. அதைக் கண்டெடுக்கும் போதுதான் வாழ்வு முழுமை அடைகிறது.

குறிக்கோளை அறிந்து கொண்ட ஒருவரின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிறது. மற்ற துயரமோ இழப்போ நேர்ந்தாலும் அதிலிருந்து வெளிவர குறிக்கோளின் மேல் உள்ள பற்றே உந்து சக்தியாகிறது.

மற்றவரின் மேல் நாம் வளர்த்துக் கொள்ளும் பரிவு, அவர்கள் தவறிழைக்கும் போது மன்னித்தலை எளிதாக்குகிறது. மன்னித்தல் அடுத்தவரின் நன்மைக்காக அல்ல. நமது சொந்த நன்மைக்காக. ஒரு முறை முழுமையாக மன்னித்த பின், அவர் மேல் எந்தக் கசப்புணர்வும் நமக்கிருப்பதில்லை. ஆரோக்கியமான மனநிலை கைவரப்படுகிறது. ஆரோக்கியமான மனநிலையே மீண்டெழுதலைச் சாத்தியமாக்குகிறது.

முடியாதென்று உலகில் எதுவுமில்லை, எதை இழந்த போதிலும் நாம் இன்னும் மீதமிருக்கிறோம் என்கிற ஒரு



# சீன உணவகத்தில் தீ விபத்து: 22 பேர் பலி

சீனாவில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 22 பேர் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள லியானிங் மாகாணத்தின் லியோயாங் நகரில் உணவகம் ஒன்று உள்ளது. 3 மாடி கொண்ட இந்த கட்டடத்தில் இன்று (ஏப்., 29) மதியம் தீவிபத்து ஏற்பட்டது. இதற்கான காரணம் குறித்து உறுதியான தகவல் இல்லை என்றாலும், காஸ் கசிவால் தீவிபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல் தெரிவிக்கின்றன. அந்த உணவகத்தின் கதவுகள் மற்றும் ஜன்னல் வழியாக தீப்பிழம்புகள் கிளம்பின. அந்த பகுதி புகை மூட்டமாக காணப்பட்டது.

இந்த சம்பவத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். 3 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள சீன அதிபர் ஷி ஜின்பிங், இந்த விபத்து நமக்கு ஒரு பாடத்தை கற்றுக் கொடுக்கிறது. காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதுடன், தீவிபத்து குறித்து விசாரணை நடத்தி காரணமானவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும் என தெரிவித்து உள்ளார். (ஐ)

# ஸ்வீடனில் துப்பாக்கிச்சூடு 3பேர் பலி




ஸ்வீடன் நாட்டின் உப்சாலா நகரில் நேற்று(ஏப்.,29) நடந்த துப்பாக்கிச்சூட்டில் 3பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

உப்சாலா நகரின் வக்சலா சதுக்கத்தில் உள்ள சலூன்கடையில் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது. துப்பாக்கிச்சூடு சப்தத்தை கேட்டு போலீசாருக்கு அங்குள்ள மக்கள் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் துப்பாக்கிச்சூடு குறித்து விசாரித்து வருகின்றனர். ஐந்து முறை துப்பாக்கிச்சூடு சப்தம் கேட்டதாக அப்பகுதி மக்கள் போலீசாரிடம் தெரிவித்தனர். (ஐ)

# லாரி டிரைவர்களுக்கு ஆங்கிலம் பேச்சுத் திறமை வேண்டும்: அதிபர் டிரம்ப் புதிய உத்தரவு

'அமெரிக்காவில் அனைத்து லாரி டிரைவர்களுக்கும் ஆங்கில பேச்சு புலமை கட்டாயம்' என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். ,ந்திய வம்சாவளியை சேர்ந்த சீக்கிய டிரைவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பொறுப்பேற்ற முதல் நாளில் ,ருந்தே பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அவரது உத்தரவுக்கு ஆதரவும் விமர்சனங்களும் எழுந்து வருகின்றன. தற்போது அவர், 'அமெரிக்காவில் உள்ள லாரி டிரைவர்கள அனைவரும் ஆங்கில புலமை பெற்று ,ருக்க வேண்டும்'என்ற உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார். ,ந்த உத்தரவு விமர்சனங்களை கிளப்பி உள்ளது.

டிரைவர்களுக்கு ஆங்கிலத்தில் புலமை என்பது ஒரு சமரசம் செய்ய முடியாத பாதுகாப்புத் தேவையாக ,ருக்க வேண்டும். அவர்கள் சாலையில் உள்ள போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான எச்சரிக்கை குறிப்புகளை படித்துப் புரிந்து கொள்ள முடியும்.

இது பொது அறிவு. புதிய போக்குவரத்து நிர்வாக சட்டத்தின் படி, அமெரிக்க லாரி டிரைவர்கள் ஆங்கிலத்தில் முறையாக தேர்ச்சி பெற்றிருப்பதை உறுதி செய்ய முடியும். ,வ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த சீக்கிய லாரி டிரைவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று சீக்கிய கூட்டணி கட்சிகள் தெரிவித்துள்ளது.

இது குறித்து சீக்கியர் சமூகத்தினர் கூறியதாவது:



டிரைவர்களுக்கான அதிக தேவையை பூர்த்தி செய்வதிலும், அமெரிக்க நுகர்வோர் மற்றும் பொருளாதாரத்தில் டிரைவர்கள் பற்றாக்குறையை குறைப்பதிலும் எங்கள் சமூகம் முக்கிய பங்கு வகித்துள்ளது 2016ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை காலகட்டத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டிரைவர்களாக பணியில் இணைந்துள்ளனர்.

இந்த உத்தரவு அமெரிக்காவில் லாரி துறையில் கணிசமான ,ருப்பைக் கொண்ட சீக்கிய சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த வழி வகுக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# இணைய தொடர்பு சேவைக்கான செயற்கைக்கோள்களை ஏவிய அமேசான்

பிரபல அமெரிக்க நிறுவனமான, 'அமேசான்' நேற்று தனது முதல், இன்டர்நெட் இணைப்பு வழங்கும் செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியது. அது, எலான் மஸ்க் தலைமையிலான 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் 'ஸ்டார்லிங்க்ஸ்' செயற்கைக்கோள் இணையதள நிறுவனத்திற்கு போட்டியாக கருதப்படுகிறது.

இந்த மாத துவக்கத்தில், அமேசான் நிறுவனம் தன், 'புளூ ஆரிஜின்' என்ற துணை நிறுவனம் வாயிலாக, 'புராஜக்ட் குய்பெர்' என்ற பெயரில், செயற்கைக்கோள் வாயிலாக இன்டர்நெட் இணைப்பு வழங்கும் முயற்சியை துவக்கியது.


இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தின், கேப் கேனவரல் ஸ்பேஸ் போர்ஸ் ஸ்டேஷன் என்ற இடத்திலிருந்து, 'யுனைடெட் லாஞ்ச் அலையன்ஸ் அட்லஸ் 5' ராக்கெட் வாயிலாக, 27 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பி, இன்டர்நெட் இணைப்பு வழங்கும் முயற்சியை அமேசான் வெற்றிகரமாக துவக்கியது.

அந்த நிறுவனத்தின் தலைவர் ஜெப் பெசோஸ் தலைமையிலான புளூ ஆரிஜின் நிறுவனம், குய்பெர் திட்டம் வாயிலாக, 3,200 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது.

குறைந்த கட்டணத்தில், விரைவான இன்டர்நெட் இணைப்பு வழங்கப்படும் என அமேசான் நிறுவனம் அறிவித்துள்ளது. திட்டமிட்டபடி எல்லாம் முறையாக நடந்தால், இந்த ஆண்டின் இறுதியில் இருந்து செயற்கைக்கோள் வாயிலாக இன்டர்நெட் இணைப்பை, அமேசான் நிறுவனம் வழங்கும்.

கடந்த 2019 முதல், எலான் மஸ்கின் ஸ்டார்லிங்க்ஸ் நிறுவனம், 8000 செயற்கைக்கோள்கள் வாயிலாக இன்டர்நெட் இணைப்பை, உலகம் முழுவதும் வழங்கி வருகிறது.

அதற்கு போட்டியாக, புளூ ஆரிஜின் நிறுவனத்தின் புராஜக்ட் குய்பெர், அமெரிக்காவின் பிரபல ராக்கெட் ஏவும் நிறுவனமான, யுனைடெட் லாஞ்ச் அலையன்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, ஏராளமான செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது. (ஐ)



# கிழக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவில் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் முன்னிலை !



மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருக்கிறார்.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் நேற்று, 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்கள் உட்பட பதவிவழி உறுபபினர் களும் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர்.

புள்ளிகளின் அடிப்படையில் விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் முதல் நிலையிலும், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர். இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் படி, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து, நியமனம் செய்வார். முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் பதவிக் காலம் கடந்த ஜனவரி 21 ஆம் திகதியுடன்நிறைவடைந்த நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் கடந்த வருடம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவைக் கூட்டம் நடாத்தப்பட்டு, முன்னணி பெற்ற மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அந்த முடிவுகளை நிராகரித்து புதிதாகத் தெரிவை நடாத்துமாறு கோரியிருந்தார்.

அத்துடன், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயகா பதவிக்கு வந்த பின்னர், ஜனாதிபதியினால் கிழக்கு பல்கலைக்கழகத்துக்குத் துணைவேந்தராக எவரும் நியமிக்கப்படவில்லை. துணைவேந்தரின் பதவிக்காலம் முடிவுற்ற பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே பதில் துணைவேந்தர்களை நிய மித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்புடைய குற்றச்சாட்டில் நான்கு சந்தேகநபரகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகளும் இடம்பெற்று வருகின்றன

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேச சபையின் பிரதிநிதிகள், சட்டமருத்துவ அதிகாரிகள், பொலிஸார், என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிட்ட தரப்புகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

புதைகுழியை அகழ்வதற்கான நிதி மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், மே மாதம் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு- கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ஆய்வுப் பணிகளை முன்னெடுத்த, மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவ இது தொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார். ஆதலால், அவர் எதிர்வரும் 3ஆம் திகதியளவில் அங்கு ஆரம்பகட்ட கள ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளார்.

சிந்துப்பாத்தி மயானத்தில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட 40 சிதிலங்களில் இரண்டு சிதிலங்கள் விலங்குகளின் என்புகள், ஏனைய அனைத்தும் மனித என்புத் தொகுதிகளுடன் தொடர்புடையவை என்ற விடயம் ஏற்கனவே நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்த அமெரிக்காவும் இன்று ஒதுங்கி

விட்டது. இந்நிலையில் எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதைப் புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுகுங்கள்." -- என்று இலங்கைக்கு வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்கலாமா? என ஆய்வு செய்து அறிக்கையைச் சமர்பிக்கக் கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உடனடி இடை நிறுத்தம், புதிய அரசமைப்புக்கான கலந்துரையாடல் உடனடி ஆரம்பம், உண்மை ஆணைக்குழு மூலம் காணாமல்போனோர் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரங்களின் உடனடி அர்த்தபூர்வ நடவடிக்கை, நீண்டகால தமிழ் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, நவீன அடிமைத்துவம் அம்சங்களைக் கொண்ட மலையகத் தமிழர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட வாழ்மக்களை ஐரோப்பிய கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து அவர்களது காணி உரிமை உட்பட வாழ்வுரிமைகளை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகளை எழுத்து மூலமாகவும், உரையாடல் மூலமாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் மனோ கணேசன் எம்.பி. நேரடியாகச் சமர்ப்பித்தார். இந்த நிபந்தனைகளைத் திகதி குறித்து நிறைவேற்றினால் மாத்திரமே இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் என்றும் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை விடுத்தார். இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கண்காணிப்புக் குழுவுக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவுக்கும் இடையியிலான சந்திப்பு - உரையாடல் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதரகத்தில் நேற்று இடம்பெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி., ஜ.ம.மு. சர்வதேச விவகார உப தலைவர் பாரத் அருள்சாமி, ஜ.ம.மு. சட்ட விவகார செயலாளர் சக்சின் கணேசன் ஆகியோரும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் தூதுவர் கார்மென் மொரேனோ, அரசியல் செயலர், கரோலினா மற்றும் ஐந்து பேர் கொண்ட ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரும் கலந்துரையாடலில் இடம் பெற்றனர்.

இது தொடர்பில், மனோ எம்.பி. தலைமையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளித்த முன்மொழிவுகள் அடங்கிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(01) பயங்கரவாதத் தடைச் சட்டம்

இன்றைய தேவைக்கு குற்றவியல் சட்டக்கோவை தாராளமாக போதுமானது. இதுவே ஜே.வி.பியின் கடந்த கால நிலைப்பாடாக இருந்தது. எனினும், புதிய சட்டம் அவசியமாயின் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் புதிய மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் வரை இன்றைய பயங்கரவாதத் தடைச் சட்ட பாவனை உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும்.

(02) புதிய அரசமைப்பு

இந்த அரசு தேர்தல் வேளையில், கடந்த நல்லாட்சிக் காலத்தில் ஆரம்பிக்கபட்டு இடையில் நிறுத்தப்பட்ட புதிய அரசமைப்புப் பணியை நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து மீள ஆரம்பிப்போம் என உறுதியளித்தது. அவ்வேளையில் நானும், இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அந்தப் புதிய அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் இருந்தோம். இந்தப் பணி இந்த வருடமே செய்து முடிக்கப்பட வேண்டும். வருடங்கள் கடந்தால் இதை ஒருபோதும் செய்து முடிக்க முடியாது என்பது எமது அனுபவமாகும். ஆகவே, இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு கலந்துரையாடல் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்.

(03) பொறுப்புக்கூறல்

உடனடியாக உண்மை ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் அடிப்படையில் வலிந்து காணாமல்போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

(04) தமிழ் அரசியல் கைதிகள்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதாகி சிறையில் இருக்கும் அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இன்று பத்து தமிழ் கைதிகள் நீண்டகாலமாக உள்ளனர். அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். கைதிகளின் பெயர் பட்டியல் விவரங்களைக் "குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் சார்பாக மு. கோமகன் தயாரிக்க, மக்கள் போராட்ட முன்னணி சார்பாக தோழர் ராஜ்குமார் ராஜீவ்காந்த் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அது இங்கே ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் தரப்படுகின்றது.

(05) பெருந்தோட்ட மக்கள்

மலையகத் தமிழ் மக்கள் பரப்பில் இருக்கின்ற பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் மிகவும் நலிவுற்ற பிரிவினர். இந்த மக்களின் நிலைமை இனிமேல் ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்பின் கீழ் வர வேண்டும். அதற்கான தரவுகள்:-

(அ) தோட்டங்களில் உற்பத்தியாகும் தேயிலை ஐரோப்பிய காலை உணவு மேசை வரை செல்லும் விநியோக பாதையின் ஆரம்பமான பெருந்தோட்டங்கள் நவீன அடிமைத்துவ அம்சங்களை கொண்டிருக்கின்றமை.

(ஆ) அரசின் சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பெருந்தோட்ட மக்களைப் போதுமான அளவு உள்வாங்காததால், அவர்கள் தனியார் கம்பனிகளின் தயவில் வாழ வேண்டி உள்ளமை.

(இ) நவீன அடிமைத்துவ தினக்கூலி தொழிலாளர் என்ற நிலையில் இருந்து, பெருந்தோட்ட தொழில் துறையில் கூட்டுப் பங்காளராக மாறுகின்ற கூட்டு வர்த்தக மாற்றம் வராமை.

(ஈ) தேசிய நீரோட்டத்தில் இருந்து திட்டமிட்ட முறையில் தள்ளிவைக்கப்பட்ட காரணத்தால், சம உரிமை மறுக்கபட்டு, நில உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை, வாழ்வாதார உரிமை ஆகியவை மறுக்கபட்டு, பொது நிர்வாக, சமூக கட்டமைப்பு மற்றும் நாட்டின் பொது நல சேவைகள் கிடைக்காமை. - என்றுள்ளது.

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரெனோ, வர்த்தகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஜெனரல், கொள்கை அதிகாரி கைடோ டோலாரா, ஐரோப்பிய பிரத்தியேக நடவடிக்கை சேவையின் இலங்கை அதிகாரி கலிஜா அகிஷேவா ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# காலிமுகத்திடலில் அரசியல் நிகழ்வு!

## அநுர அரசு மீது ரணில் பாய்ச்சல்

கொழும்பு, ஏப். 30

கொழும்பு, காலிமுகத்திடலை அரசியல் நிகழ்வுக்குப் பயன்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய அரசு அந்த வாக்குறுதியை மீறியுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நான் தேர்தலில் போட்டியிடவில்லை. பொதுக்கூட்டங்களில் உரையாற்றுவதும் கிடையாது. ஓரிரு விளக்கமளிக்கும் கூட்டங்களில்தான் பங்கேற்று வருகின்றேன். அப்படியிருந்தும் ஊர் முழுதும் என்னைத்தான் ஆளுங்கட்சியினர் திட்டித்தீர்த்து வருகின்றனர். ஆனால், எதிர்க்கட்சித் தலைவரைப் பாராட்டுகின்றனர். இப்படியொரு தேர்தலை நான் கண்டதில்லை.

அதேபோல், மே முதலாம் திகதியன்று காலிமுகத்திடலில் பேரணியை நடத்துவதற்கு அநுர அரசு தீர்மானித்துள்ளது. காலிமுகத்திடலில் தேர்தல் பரப்புரைகளையோ அல்லது அரசியல் நிகழ்வுகளையோ நடத்துவதில்லை என்று கட்சிகள் அனைத்தும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள நிலையில், அரசின் இந்த நடவடிக்கை தவறானது." - என்றார்.

### கணேமுல்ல சஞ்சீவ படுகொலை:

# முன்னாள் சிறை அதிகாரி பிணையில் இன்று விடுவிப்பு

கொழும்பு, ஏப். 30

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ என அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரத்ன என்பவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிறைச்சாலை அதிகாரியைப் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பூஸா சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலை அதிகாரியே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கணேமுல்ல சஞ்சீவ கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# ஒய்வூதியர்கள் ஊதிய பிரச்சினைக்கு தீர்வு காண அரசு நடவடிக்கை!



கொழும்பு,ஏப்.30

ஓய்வூதியர்கள் எதிர்கொள்ளும் ஊதிய பிரச்சினைகளைத் தீர்க்க அரசு உடனடியாக தலையிடும் என தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியர்கள் எதிர்கொள்ளும் ஊதிய முரண்பாடுகள் குறித்து நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலின் போது,

2015 முதல் ஓய்வூதியம் பறிக்கப்பட்டமை மற்றும் 1997 ஆம் ஆண்டு பி.சி.பெரேரா ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூலம் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இந்த பிரச்சினைகள் தொடர்பாக மேலும் கலந்துரையாடுவதற்கு, இன்று ஒரு சந்திப்பை நடாத்துவதற்கு இணக்கம் காட்டப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் அரச நிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் ஓய்வூதிய திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# மே தினத்தன்று விசேட போக்குவரத்து திட்டம்



கொழும்பு,ஏப்.30

உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள பேரணிகளுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து திட்டமொன்றை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு நகரில் 15 இடங்களில் பேரணிகள், கூட்டங்கள் மற்றும் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நடைபெறவுள்ள மே தினப் பேரணிகள், கூட்டங்கள் மற்றும் நினைவேந்தல்களால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுமாயின், அப்பகுதிகளைத் தவிர்த்து மாற்று வீதிகள் வழியாக வாகன போக்குவரத்தை மேற்கொள்ளுமாறு பொலிஸார் சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், மாற்று வீதிகள் பற்றிய தகவல்கள் தேவைப்படும் போது, வாகன போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து உதவி பெறலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இன்று இடியுடன் கூடிய மழை

கொழும்பு,ஏப்.30

நாட்டின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அந்தவகையில், தென் மற்றும் மேல் மாகாணங்களிலும், புத்தளம் மாவட்டத்திலும் காலை வேளையில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், மத்திய, ஊவா, சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரையில் மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கனடா பாராளுமன்றத்தில் மூன்று இலங்கை தமிழர்கள்



கனேடிய பாராளுமன்றத்தில் முதன் முறையாக இலங்கை தமிழ் பூர்வீகத்தைச் சேர்ந்த மூவர் உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர்.

கனேடிய பொதுத்தேர்தலில் இலங்கை தமிழ் பூர்வீகத்தைச் சேர்ந்த ஐந்திற்கு மேற்பட்ட தமிழ் கனேடியர்கள் போட்டியிட்டனர்.

இந்தநிலையில் அவர்களில் ஹரி ஆனந்தசங்கரி, யுவனிதா நாதன் மற்றும் அனிதா ஆனந்த் ஆகியோர் ஆளும் கட்சியான லிபரல் கட்சியில் வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிவரும் நிலையில் இந்த தேர்தலில் பிரதமர் மார்க் கார்னியின் லிபரல் கட்சி அறுதிப் பெரும்பான்மைக்கு குறைவான பலத்துடன் வெற்றி பெற்றுள்ளது.

இந்த தேர்தலில் ஆளும் லிபரல் கட்சியில் இருந்து இலங்கைத் தமிழ் பூர்விக தமிழ் கனேடியரும் கனேடிய நீதி அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி தனது ஸ்கார்பாரோ - கில்ட்வுட் - ரூஜ் பார்க் தொகுதியில் போட்டியிட்டிருந்தார். அதேபோல ஆளும் கட்சியில் இருந்து யுவனிதா நாதனும் பிக்கரிங் - புரூக்ளின் தொகுதியிலும் களம் இறங்கியிருந்தார். முயமளடைடந கிழக்கு தொகுதியில் அனிதா ஆனந்த் போட்டியிட்டிருந்தார். (ஐ)

# மண்டைதீவில் 500 கி.கி மஞ்சளுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.30

மண்டைதீவு பகுதியில் 500 கிலோ கிராம் மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவர், செவ்வாய்க்கிழமை (29) கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சளை கைமாற்றும் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதான சந்தேக நபரை ஊர்காவற்றுறை பொலிஸார் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி!

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் விடயதானத்துக்குரிய புதிய சட்டங்களை அறிமுகம் செய்யவும், தற்போதுள்ள சில சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார். அதன்படி, பெருந்தோட்ட முகாமைத்துவ சட்டம் என்ற புதிய சட்டமும், துருசவிய நிதியத்தின் அதிகாரங்களை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கான புதிய சட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் கட்டுப்பாட்டு சட்டம், சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற சட்டம், தேயிலைச் சக்தி நிதியச் சட்டம் உள்ளிட்ட சில சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.04.2025 வெளியிடப்பெற்றது.